உ
சிவமயம்





மாதகல் கிழக்கு, மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திருமதி சரஸ்வதி அதிகாரசிங்கன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# சரஸ் மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29-03-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மாதகல் கிழக்கு, மாதகலைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி சரஸ்வதி அதிகாரசிங்கன்

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# சரஸ் மலர்

## 29-03-2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்ப இதயத்தெய்வம்!
குடும்பங்களின் பெரும் தலைவி!
மாதகல் திருமதி அதிகாரசிங்கன்
சரஸ்வதி (சரஸ்) அவர்கள் தம் தூய
நல் ஆத்மா எம்பெருமான் திருவடி
நிழலில் நிலையான நித்திய ஆத்ம
சாந்தி பெற
"சரஸ்"
எனும் இந் நினைவமுதம் தனை எமது
கண்ணீர் நிறைந்த காணிக்கை என
அவர்தம் பாதங்களில் கண்ணீரோடு
சமர்ப்பிக்கின்றோம்.


பாசமுள்ள
இ. அதிகாரசிங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப்பாக்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

திருநாமம் அஞ்சழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திருமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன் முன் மலர் பறித்திட்டுண்ணாராகில்
அருநோய்கள் கெட வெண்ணீ றணியா ராகில்
அளியிற்றார் பிறந்தவா றெதோ வென்னில்
பெரு நோய்கள் மிகநலியப் பெயர்ந்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநம
வெனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவபொருமான்
தானே வந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள் செய்தான்
ஊனாரும் உயிா வாழ்க்கை ஏறுத்தன்றே
வெறுத்திடவே.

## திருவிசைப்பா

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தழிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
காண விகிர்தன் ஆடுமே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்று மென்றும் உள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்றும் வேண்டுநான்
மிகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன் னடியின்வீ
ழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுகனடி பேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகள்
மற்பொரு திரள்புய மத யானை
மத்தள வயிறினை உத்தமி புதல்வனே
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ றுறைதரதம்
அச்சுது பொடி செய்த அதிதீரா
அத்துய ருதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை குபமாகி
அக்குற மகளுடன் அச்சுறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகாற்றுப்படை வெண்பா

உன்னை ஒழிய ஒருவரையான் நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான்பின் செல்கேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.

***********

என்செயலால் ஆவது யாது ஒன்றும் இல்லை இனித்தெய்வமே
உன் செயலே என்று உணரப்பெற்றேன் இந்த ஊன் எடுத்த
பின் செய்த தீவினை யாது ஒன்றுமில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்கனே வந்து மூண்டதுமே.

பிறக்கும் பொழுது கொடுவந்தது இல்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கோடு போவது இல்லை இடை நடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்தது என்று கொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக்கு எண் சொல்லுவேன் கச்சி ஏகப்பனே.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடி ஆடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனி சாம் பிணங்கள்
கதறும் கணக்கெள்ள காண் கயிலாய புரிக்காளத்தியே

பட்டினத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னார் அடிக்கடி பாராயணம் செய்யும் வேறு சில தேவாரங்கள்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

எல்லா உலகமுமானாய் நீயே
ஏகம்ப வேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செவ்வாய் செல்வம் தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதியே.

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையெ தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள்வதற்கு
யாது மையுற வில்லையே.

இடரினும் தளரினும் எனதுரு நோய்
தொடரினும் உன்கழல் தொழு தெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமோ ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறையரனே.

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாயும் நீ
ஒப்புடைய மாதருமொன் பொறாடும் நீ
ஒருகுலமும் சுற்றமுன் மோரூரும் நீ
துய்ப்பனவும் முய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொன் நீ யிம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ யெறூர்ந்த செல்வனீயே.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி விடர்ப்படோம் நடலை யில்வோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
தாமாக்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கமெண் குழையோர் காதிற்
கோமாற்கெ நாமென்னும் மீளா ஆனாய்க்
கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னே யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவறுக்கே பிச்சி யானாள்
அன்னையை அந்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகவிடத்தார் ஆசா ரத்ராதத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கேட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தவேள் தாளே.

எண்ணுகேனென் சொல்லியெண்ணு கேனோ
வெப்பெடு மான்றிருவடியே யெண்ணினல்லால்
கண்ணிலேள் மற்றோர்களை கண்ணில்லேன்
கழலடியே கை தொழுக கண்ணில்லேன்
ஒண்ணுனே யொன்பது வாசல் வைத்தார்
யொக்கவடைக்கும் போதுணரமாட்டேன்
புண்ணியாவுன்டைடிக்கே பொதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சரஸ்வதி அதிகாரசிங்கள்

## அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

தக்கின கைலாயம் என்னும் புகழ் பூத்த நம் ஈழமணித் திருநாட்டின் வடபகுதி யாழ்ப்பாணம் ஆகும். இதற்கு வடமேற்கு கரையோரமாக வயல்வெளிகளும், வரலாற்றுப் புகழ்பெற்ற அரசடி விநாயகர் ஆலயமும், அருள் பொலிவுடன் விளங்கும் நுணசை முருகன் ஆலயமும், பக்தர்கள் கேட்கும் வரங்களை அள்ளி தந்து கொண்டு இருக்கும் பாணவெட்டி அம்பாள் ஆலயமும் அணிசெய்து கொண்டு இருக்கும் கிராமம் தான் மாதகல் ஆகும். இக்கிராமத்தில் உடையார் பரம்பரையில் மூன்றாவது உடையாராக பணிபுரிந்தவர் அமரர் இராமலிங்கம் சுப்பிரமணிய உடையாராகும். இவர் உடையாராக இருக்கும் பொழுது பதவி வழி மரணவிசாரணை அதிகாரி (Coroner) ஆகவும் பணி புரிந்தவர்.

இவர் தனக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட செய்து கொண்டு இருக்கும் போது அவருடைய நெருங்கிய உறவினரான சேதுப்பிள்ளை என்னும் மங்கையை திருமணம் முடித்தார். இந்த தம்பதிகளுக்கு மூன்று ஆண்பிள்ளைகளும் இரண்டு பெண்பிள்ளைகளும் கிடைக்கப் பெற்றன. இவரின் மூத்த புதல்வன் கந்தையா, தங்கம் என்னும் மங்கையை திருமணம் செய்தார். இத்திருமணத்தின் பயனாக இவர்களுக்கு தங்கராசா என்னும் சற்புத்திரனும் முத்து, இராசம்மா, என்னும் இருபெண்பிள்ளைகளும் கிடைக்கப் பெற்றன. அமரர் தங்கராசா நடுநிலைக்கல்வி கற்று, விவசாயத்தில் ஈடுபட்டு வந்தார். இவருக்கு திருமணப் பருவம் வர உறவினரான சரஸ்வதி என்னும் மங்கையை பெரியோர்கள் திருமணம் செய்து வைத்தார்கள். இத்திருமணத்தின் பயனாக இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் நீலாம்பாள், சோமசுந்தரம் என்பவர்கள் கிடைக்கப் பெற்றன. பின் இவரின் மனைவி சரஸ்வதி திடீரென காலமாகி விட்டார். பின் இவர் தையல்நாயகி என்பரைத் திருமணம் செய்து கொண்டார். முதல் ஒரு பெண்பிள்ளை கிடைக்கப்பெற்றன. இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெண்பிள்ளைக்கு தனது முதல் மனைவியின் பெயரை வைத்தார். சரஸ்வதி தான் இவ் நினைவுமலரின் கதாநாயகியாவார். இவர் 21-08-1949ம் ஆண்டு வையக வாழ்வில் அவதரித்தார். இவருடன் பரமேஸ்வரி, சுப்பிரமணியம், பரமசிவம், கனகாம்பிகை, மகேந்திரன், சின்னமலர் என்பவர்கள் உடன் பிறப்புக்களாக கிடைக்கப்பெற்றன.

அன்பும், பண்பும், அறிவும், அடக்கமும் இளமையிலே பெற்றிருந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மாதகல் விக்கினேஸ்வர வித்தியாசாலையிலும் பின் மாதகல் சென் தோமஸ் கல்லூரியிலும் கற்று G.C.E. (O/L) பரீட்சையில் சித்தியடைந்தார். பின் கல்வியை நிறுத்திவிட்டு தொழில்புரிய விரும்பி பண்டதரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் நடாத்தி வந்த மின் நெசவுசாலையில் இணைந்தார். இவருக்கு திருமணம் செய்து வைக்க விரும்பிய பெற்றோர் பரநிருபசிங்கம் மன்னன் பரம்பரையில் வந்த நல்லதம்பி இளையதம்பி அவர்களின் நான்காவது புத்திரன் அதிகாரசிங்கன் அவர்களை செய்து வைக்க விரும்பினார்கள். அதேநேரம் சிங்கப்பூரில் இருந்து வருகை தந்து இருந்த அதிகாரசிங்கன் அவர்களின் சகோதரிக்கு பரமேஸ்வரிக்கு இத்திருமண விடயத்தைக்கூற அவர் பெண்ணை பார்த்தவுடன் விரும்பம் கொண்டார். பின் அவர் சிங்கப்பூர் சென்று தாயாருக்கு கூற அவர் உடனே மாதகலுக்கு வருகை தந்து பெண்ணை பார்த்தார். அவரின் ஒழுக்கம், பண்பு, அமைதியும், அடக்கமும், பணிவும் என்பவற்றால் கவரப்பட்ட தாய் தங்கம்மா தனது மகனுக்கு இத்திருமணத்தை செய்து வைக்க விரும்பினார். அதிகாரசிங்கன் மாதகலில்தான் வாழ்ந்து வந்தார். இவர் ஒரு பெரும் விவசாயி. பின் இவர்களின் திருமணம் 20-10-1975ஆம் ஆண்டு அம்மி மிதித்து அருந்ததி பார்த்து அந்தணர்கள் பெரியோர்கள் முன் நடைபெற்றன.

இவரின் தந்தை மாதகலைச் சேர்ந்த சுந்தரவல்லியை திருமணம் புரிந்து அதன் பயனாக தங்கதேவி, விசாலாட்சிதேவி, தனலட்சுமிதேவி, இரத்தினதேவி, விஜயேந்திரன் ஆகிய பிள்ளைச் செல்வங்களை பெற்று எடுத்தார்கள். இப்படியிருக்கும் காலத்தில் சுந்தரவல்லி 1930ஆம் ஆண்டு மரணம் அடைந்தார்.

பின் மாதகலைச் சேர்ந்த சுப்பையாப்பிள்ளையின் மகள் தங்கம்மாவை இளையதம்பி இரண்டாவது திருமணம் புரிந்தார். இவர்களுக்கு பதினொரு செல்வங்கள் கிடைக்கப்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களாவன பரநிருபசிங்கன், விக்கிரமசிங்கன், பரமேஸ்வரிதேவி, மகேஸ்வரிதேவி, அதிகாரசிங்கன், நிற்சிங்கசெனாதிராஜா, பூமாதேவி, நரசிங்கன், மரகதநாச்சிதேவி, இளையசிங்கன், இராஜசூரன் ஆகும். பூமாதேவி தவிர்த்து மற்றோர் யாவரும் சிங்கப்பூரில்தான் வாழ்ந்து வருகிறார்கள். இளையதம்பி இருதாரப் பிள்ளைகளோடு சேர்த்ததில் மொத்தம் பதினாறு பிள்ளைகளுக்கு தந்தையாகிறார். இது பெருமைக்குரிய விடயமாகும்.

அமரர் சரஸ்வதி அவர்கள் தனது திருமணத்துக்குப் பின் தன் தொழிலை நிறுத்திக் கொண்டார். இவர் இல்லற வாழ்க்கையே "என் கடன் பணி செய்து கிடைப்பதே" என்றும் அப்பர் பெருமானின் வாக்கைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். தனது இலத்திற்கு வருபவர்களை இன்முகம் காட்டி வரவேற்று விருந்தோம்பி உபசரிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைவார். இவர் ஆலயங்களுக்கு செல்லும் போது தனது கணவனுக்கு வேண்டிய உணவு வகைகளை தயாரித்து வைத்துத்தான் செல்வார். கணவனே கண்கண்ட தெய்வமாக கருதி அவருக்கு வேண்டிய சகல விதமான பணிவிடைகளை சிறந்த முறையில் ஆற்றி வந்தவர் என்பது மிகையாது.

இவர் தனது சகோதரியின் மகனின் திருமண வைபவத்தில் கலந்து சிறப்பித்தார். பின் சகோதரியிடம் "இனி நான் உன்னுடைய மற்ற பிள்ளைகளின் சுபகாரியங்கள் நடைபெறும் போது இருப்பேனோ என்னவோ தெரியாது. எனவே தான் என்னால் இயன்ற உதவிபுரிந்து சிறப்பித்தேன்" என்றார். இது அவருக்கு தனது ஆயுள் கிட்ட வந்து விட்டது என்பது தெரிந்து விட்டது போலவும்.

இவரும் கணவனும் 1979ஆம் ஆண்டு சிங்கப்பூர் சென்று அங்கே தனது கணவரின் சகோதரர்களுடன் தங்கி, பின் அங்கே பார்க்க வேண்டியவைகளையும் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார். தனது மாமியாருடன் மிகவும் அன்பாக பழகி அவரின் அன்பை பெற்றார். பின் திரும்பவும் 1982ஆம் ஆண்டு சென்று தங்களுக்கு மக்கட்பேறு இல்லை என்பதற்காக அங்கே உள்ள மகட்பேறு வைத்திய நிபுணர்களின் வைத்தியத்தை பெற்றார். ஆனால் அது கைகூடவில்லை அப்படியிருந்தும் அவர் மனம் சோரவில்லை. தனது கணவன்தான் தனது பிள்ளை என்று வாழ்ந்து வந்தார். பின் மீண்டும் 1983ஆம் ஆண்டு சென்று அங்கே தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனர் மைத்துனிமார்களுடன் பெறாமக்களுடன் மகிழ்சியில் இருந்து நாடு திரும்பினார். பின் 1987ஆம் ஆண்டு மீண்டும் சிங்கப்பூர் சென்று அங்கிருந்து மலேசியா சென்று தனது பேரன் அமரர் சடாசிவம் அவர்கள் வீட்டில் தங்கியிருந்தார். அமரர் சடாசிவம் அவர்கள் தனது பேர்த்தி அமரர் சரஸ்வதியை கண்டு மிக மகிழ்ச்சி அடைந்து, பின் அவரையும் கணவரையும் அங்கே உள்ள பிரசித்தி பெற்ற இடங்களுக்கு அழைத்து சென்று பார்வையிடச் செய்தார். அவர்களுக்கு விதம் விதமான பழவகைகள் வாங்கிக் கொடுத்தார். இதற்கு அமரர் சரஸ்வதி பெரும் நன்றியை பேரனுக்கு செலுத்தினார். இவர் தங்களுக்கு செய்த உதவியை மறக்காமல் இருந்தார்.

இவர் மாதத்தில் வரும் இரண்டு சதுர்த்திகள், வெள்ளிக்கிழமைகள், மற்றும் முக்கியமான சைவபண்டிகைக்கு விரதம் இருந்து இறைவனை வணங்குபவர். மாதகலில் உள்ள ஆலயங்களில் நடைபெறுகின்ற மஹோற்சவ விழாக்காலங்களில் விரதமிருந்து ஆலயத்துக்கு சென்று அங்கே நடைபெறுகின்ற பூஜைகள் முடிந்த பின்பே உணவு உண்பார். இவர் இறைவனின் மேல் அளவில்லாத பக்தி வைத்து இருந்தார். அமரர் சரஸ்வதி அவர்களின் பிரிவு மாதகல் கிராம மக்களுக்கு பேரிழப்பு ஆகும்.

நோய்வாய்ப்பட்டு படுக்கையிருந்து தானும் வருந்தாது, மற்றவர்களையும் வருத்தாமல் இல்லற வாழ்க்கையில் 32 வருடம் பூர்த்தி செய்த நிலையில் விய வருடம் மாசித்திங்கள் திங்கள் வாரம் பூர்வபக்க ஏகாதசி 26-02-2007 அன்று காலை 4.35 மணியளவில் இறைவன் திருப்பாதம் சிக்கன பிடித்தார். அன்னாரது மரணம் எதிர்பாராத இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவரது குலத்தெய்வமான நுணசை முருகனையும், அரசடிபிள்ளையாரையும், பாணவெட்டி அம்பாளையும் பிரார்த்திப் போமாக.

**நோயிற் கிடவாமல், நொந்து மனம் வாடமற், பாயிற் கிடவாமற்**
**பாவியேன் காயத்தை ஓர் நொடிக்குள் நீக்கி என என்**
**பொருள் உன் சீரடிக்குள் வைப்பாய் சிறந்து.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமையுடன் வாழ்ந்த உத்தமி அம்மையார்

அன்பு ஒழுகும் முகம், அறிவு கமழும் முகம், எளிமைபேணும் இனிமை, இனிமைகாணும் எளிமை இவைகளை அணிகலமாகக் கொண்ட எமது மாமி சரஸ்வதி காலமாகி விட்டார் என்ற செய்தி கேட்டவுடன் எனது குடும்பத்தாரும் நானும் மிக அதிர்ச்சி அடைந்தோம்.

அமரர் மாமியும், மாமாவும் 1992ம் ஆண்டு மக்கள் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த போது எங்கள் வீட்டில் வந்து தங்கியிருந்தார்கள். அப்போது நான் அவருடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது. அவரது எளிமை பிறரை மரியாதை செய்யும் உரிய பண்பு எவருடன் ஒத்துப்போகும் தன்மை முரண்படாத சுபாவம் என்பன அவரிடம் இருப்பதைக் கண்டேன். நான் மாதகல் சென்றால் அவருடைய வீட்டிற்குச் சென்று அவருடன் கதைக்கத் தவற மாட்டேன்.

அன்னார் அமரர் ஆவதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் எமது உறவினர் வீட்டுக்கிருத்திய வீட்டில் சுமார் ஒருமணித்தியாலத்திற்கு மேல் மிகவும் சந்தோஷமாக என்னுடன் கதைத்துக் கொண்டிருந்தார். பின் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று வீட்டில் செய்த திருத்தங்களைக் காட்டி கதைத்தார். அன்றுதான் நான் அவருடன் கடைசியாகக் கதைத்தது. அதன் பின் இல்லை. அவர் அப்போது சுகதேகியாகவே இருந்தார். எந்தக்காலத்திலும் இறைபக்தியை கைவிடாது கண்ணியமாகவே வாழ்ந்து வந்தார். யாழ்குடாநாட்டிலுள்ள பிரசித்திபெற்ற சகல ஆலயங்களுக்கும் சென்று இறைவழிபாடு செய்தவர். கேதாரகௌரி விரதத்தினைக் கைக்கொண்டு அந்த காப்பையே (நூல்) தனக்குப் பாதுகாப்பு என்று கருதி அதனையே அணிந்து வந்தார். இவர் ஆலயங்களில் மிக இனிமையாக பக்தி சொரிய பாடுவதை நான் பார்த்து இருக்கின்றேன். அமரர் சரஸ்வதி அவர்கள் இளம் வயதிலிருந்தே சைவப்பாடுமிக்கவர். மாமி இன்னும் நீடியகாலம் வாழ்ந்து இருக்க வேண்டியவர். ஆனால் காலன் அவரது உயிரை திடீரென எவரும் எதிர்பாரமல் கவர்ந்து இறைவனடி சேர்த்து விட்டார்.

இயற்கையை நினைத்து ‘எப்போ முடிந்த காரியம்’, ‘யாம் அறிவோம்’ முழுவதும் உண்மை ஒரு பொல்லாப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்னும் யோகர் சுவாமிகளின் அருள் வாக்கை நினைத்தும், பட்டினத்தார் கூறியபடி முடிசார்ந்த மன்னரும் மற்றும் உன்னோடு முடிவில் ஒரு பிடி சாம்பலாக வெந்து மண்ணாவது போல மாமி சரஸ்வதி அம்மையாரும் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து இன்று எம்மத்தியில் இல்லை இதுதான் இயற்கை என்பதை நினைத்து மனதைத் தேற்றி அவரின் பிரிவால் துயருறும் அவரின் கணவர் மற்றும் உற்றார், உறவினர் ஆகியோருக்கு ஆறுதல் கூறி அவரது ஆன்மா சாந்தியடையவேண்டி எல்லாம்வல்ல நுணசை முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**திருமதி செல்வரத்தினம் கௌரி**
(மருமகள்)

அப்புக்காத்து வளவு,
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை,

"மனதை என்மீது செலுத்து எனக்காக சேவை செய், எனக்காகத் தியாகம் செய், என்னைப் பணிந்து வணங்கு, பின்பு நீ என்னிடம் வசிப்பாய் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்பதை நான் உன்னிடம் உறுதியளிக்கிறேன். கடமைகளை எல்லாம் செய்துவிட்டு என்னைச் சரணடைந்துவிடு உன்னைப் பாவங்கள் அனுபவத்திலிருந்தும் விடுவிக்கின்றேன் வருந்தாதே".

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லக விளக்கு அணைந்தது

சரஸ்வதி மச்சாள் இயற்கை எய்திய செய்தி கேட்டு நாங்கள் எல்லோரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். நல்லவர்கள் இறைநாமங்களையும் இறைவன் புகழ் பாடுவதையும் செய்து இறைவனடிக்கே சென்று விடுகிறார்கள். இப்படியான நல்லவர்கள் வரிசையில் அமரர் சரஸ்வதியும் ஒருவராவர்.

இறைபக்தியும் ஆன்மிக ஈடுபாடும் கொண்ட மச்சாள், எங்களோடு அன்போடு பலதும் பேசி சிரித்து மகிழ்ந்தவர். அவரை நினைத்துப் பார்க்க எங்கள் மனம் வேதனையால் குமுறுகிறது. ஆனால் இவர் ஒரு புண்ணியவதி. பூவும் பொட்டுடன் சுமங்கலியாக இறைவனடி சேர்ந்தார். இறுதியில் "காதற்ற ஊசியும் வராது காணும் கடைவழிக்கே " என்ற பட்டினத்தாரின் தத்துவத்தை உணர்ந்து ஆறுதல் அடைவோமாக.

அன்னாரின் மறைவால் துயரமடைந்திருக்கும் கணவன், மற்றும் சகோதரர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் துக்கம் நீங்கி அன்னாரின் ஆத்மா நற்கதியை அடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ந. சிவகுமார்,**
மாதகல் கிழக்கு.

சிவா தொலைத் தொடர்பு நிலையம்,
பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவர் புலம்பல்

அன்பே! என் ஆருயிரே! அழகின் பாவாய்
இன்பே! என் இதய தீபமே! இனி எங்கு காண்பேனோ
செந்தாமரை முகத்தை சிந்தைதனில் மறப்பேனோ
சென்றாய் நீ சிவனுலகம் செல்லிடத்தை அறியேனோ.

## மைத்துனி தங்கதேவி புலம்பல்

உற்றவர்கள் எத்தனையே பேர் ஊரில் இருந்தாலும்
மற் எமக்கு வாய்த்த வடுஞ் மைத்துனியே
உற்ற துணை என்று இருக்க வுண்ணாளே நீ மறந்தே
பற்றை ஏன் விட்டாய் பகர்

## மைத்துனி தனலட்சுமி தேவி புலம்பல்

மைத்துனியே எங்கள் மன நிறைவுக் கேற்பவே
பூமிதனி வாழ்ந்தவெம் பொன்மணியே நாமின்று
கன்றை இளந்தலறும் ஆப்போற் கலங்கு கின்றோம்
இன்றெம்மைத் தேற்றிடுவார் யார்.

## மைத்துனர் பரநிருப சிங்கன் புலம்பல்

கலகலப்பாய் பேசியெமை மகிழ்வடையச் செய்தீர்கள்
மயங்க விழிக்க விட்டு பாதியிலேன் சென்றீர்கள்
பாச மலர் நாம் வாட ஆசை மைத்துனியே
இறைவன் பாதமலர் பற்றிடவே சென்றிரோ?

## மைத்துனர் விக்கிரம சிங்கன் புலம்பல்

உன் போலொரு மச்சாளைப் பெற்ற நாமெல்லாம்
பொன் போலல்லே மதித்துப் பேணி வந்தோம்
மின் போல் நீயும் மறைந்தாயே அம்மா
தென்பே இல்லாது நினைக்கின்றோம் நாமிங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனி பரமேஸ்வரி புலம்பல்

உள்ளத்தில் நாம் கொண்ட எண்ணமெல்லாம்
ஊமையாக்கி விட்டாயம்மா – என்ன செய்ய
ஊழின் விளைவு தானே இதுவென்று
உங்களை நினைத்து நிதம் கலங்குகின்றோம்

## மைத்துனி மகேஸ்வரி தேவி புலம்பல்

பொன்னே எனக் கருதி வந்த பாவிகள் நாம்
என்னே உம் விதி எனவே எண்ணி எண்ணி நாமும்
உம் திருமுகத்தைக் காணவல்லோ துடிக்கின்றோம்
இன்னமுதே நீயும் எப்போது வருவாயோ

## மைத்துனி பூமாதேவி புலம்பல்

மச்சாள் என நாம் அழைக்கும் குரல் தான் கேட்கவில்லையே
மச்சாள் நீங்கள் எங்கு ஓடி மறைந்து விட்டீர்களோ
என்றென்றும் எமை ஏங்கித் தவிக்க விட்டுவிட்டு
எம்பிரான் பாதம் சென்றடைந்து விட்டீர்களோ.

## மைத்துனர் நரசிங்கன் புலம்பல்

பொறுமைக்கு சிகரமான எம்மருமை மைத்துனியே
போனதுதான் ஞாயமோ துயர் தாங்க முடியவில்லை
சகோதரராய் நாமெல்லாம் உங்களுடன் பழகியது
சகலரும் அறிந்ததே சிறப்புடன் கதைத்ததே

## மைத்துனி மரகதநாச்சி தேவி புலம்பல்

இன்று வருவாய் நாளை வருவாய் என நாம்
நின்று இங்கு உன்னை எதிர் பார்த்திருக்க
சென்றுவிட்டாய் நீ விண்ணோக்கி செய்வதறியோம் நாமிங்கு
குன்றா அரன் நீ பெற்று குறையா ஆத்ம சாந்தி பெறுவாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர் இளைய சிங்கன் புலம்பல்

சினமே தெரியாத எம் செல்ல மச்சாளே நீ
ஏன் எம்மை மறந்து விண்ணுலகு சென்றாயோ
அனலாய் அடி வயிறு பற்றி எரிகின்றது
எம் அருமை மச்சாளே எம் முன்னே நீ வருவதெப்போ.

## மைத்துனர் இராஜசூரன் புலம்பல்

கண்ணே மணியே கனிவான எம் மச்சாளே – நீ
மண்தனை விட்டகல விதியதோ உந்தியது – உன்
வண்ணமுகம் நாம் காண்பதுவும் இனி எப்பிறப்பில்
விண்ணிலிருந்து நீயும் எம் வேதனையைப் பாருமம்மா.

## ஆண் சகோதரர்மார் புலம்பல்

ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் உத்தமராய் நாமிருந்தோம்
ஒற்றுமையின் சிகரமாய் உலவி நிதம் வாழ்ந்து வந்தோம்
சோதரியே எமைப்பிரிய மனமெப்படி வந்திங்கே
சோகநிழல் படரவிட்டு சோதியும் கலந்தீரே.

## பெண் சகோதரிமார் புலம்பல்

உற்றவென் சோதரியென்று உள்ளம் மகிழ்வுறவே
பற்றுடனே வாழ்ந்தீர் பலகாலம் - மற்றுலகில்
என்ன குறை கண்டீர் என்னே எமைவிடுத்தீர்
எந்நாளிற் காண்பேனினி.

## உற்றார் புலம்பல்

ஊருக்குள் நல்லவாராய் உண்மையுள்ள உறவினராய்
யாருக்கும் வெறுக்காத தன்மையராய் வாழ்ந்தவரே
சீருற்ற சிவன் பாதஞ் சென்றடைவீர் என்றெண்ணி
நாவற்று நாம் நாதனையே வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்மக்கள் புலம்பல்

அன்பு நிறை மொழியாலும் பண்பு நிறை செயலாலும்
ஊரிலே நீங்கள் உயர்ந்து நின்று கதைகேட்டு
உங்கள் வழியில் வாழ வளர கேட்டோம்
வானுலகில் இருந்தெம்மை வழ்காட்ட பிரார்த்திக்கின்றோம்.

## தேற்றம்

இத்தனை நாள் இவ்வுலகில் இல்வாழ்க்கை என்று
அத்தன் எழுதியதை யார் அழிப்பார். முத்தி பெறு
சரஸ்வதி வாழ்ந்தார் சிவஞான முத்தியெய்தி
எல்லை அடைந்தார் மகிழ்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

## காயத்திரி மந்திரம்

**ஓம்**
**பூர் புவ ஸ்வா**
**தத் ஸவித்துர் வரேண்யம்**
**பர்கோ தேவஸ்ய தீமஹி**
**திய் யோ யோந ப்ரசோதயாத்**
**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**எல்லாம்வல்ல சக்தியையும் ஆற்றலையும்**
**எமக்குத் தந்தருள்க என்று இறைவனைப் பிரார்த்தித்தல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் அறிவுரைகள்

இவ்வலகில் படைக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் கண்டிப்பாக மரணம் அடைந்தே தீர வேண்டும். மரணத்தைக்கண்டு அஞ்ச வேண்டாம். கடவுளைத் தொடர்ந்து நினைத்துக் கொண்டு இருக்கும் பொழுது மரணத் தருவாயில் கூட அவரை நீங்கள் நினைக்கலாம். இவ்வாறு செய்து கொண்டிருந்தால் கடவுள் உங்களை அவரிடம் அழைத்துக் கொண்டு செல்வார். உங்களுக்கு மறுபிறவி என்பது எப்பொழுதும் கிடையாது. மரணம் என்பதும் உங்களுக்கு கிடையாது.

இந்த உலகில் உள்ள யாவும் கடவுளின் படைப்பாகும் கடவுள் எல்லா வஸ்த்துக்களையும் முழுமையுடன் பூர்த்தி செய்து வைக்கின்றார்.

உங்களது கடமை எப்பொழுதும் அவரை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு நீங்கள் செய்து கொண்டு இருந்தால் சமாதி நிலையை அடையும் ஒரு நேரம் வரும். அந்தச் சமாதியில் மனம் வேலை செய்வது முற்றிலும் நின்றுவிடும். இந்நிலை துக்கத்தினின்று வேறுபட்டதாகும். உறங்கும் பொழுது நீங்கள் எதையும் அறியமாட்டீர்கள். ஆனால் சமாதி நிலையில் நீங்கள் யாவற்றையும் அறிவீர்கள் இந்த நிலையில் நீங்கள் கடவுளுடன் ஒன்றாக ஐக்கியமாகி விடுவீர்கள். நீங்கள் இறை அம்சமாகவே மாறி எல்லாவற்றையும் அறிவீர்கள்.

நீங்கள் எப்பொழுதும் எவரையும் மனதாலும், வார்த்தை யாலும் மற்றும் செய்கையினாலும் புண்படுத்த மாட்டீர்கள். ஆசைகள் என்பன உங்களுக்கு இராது. இந்நிலையை நீங்கள் கண்டிப்பாகச் செய்தாக வேண்டும். கடவுள், குருவை வழிபடுதல், தூய்மை, நடத்தையில் நேர்மை மிதமான தன்மை, அகிம்சை போன்றவைகள் உடம்பில் தவத்தை வடிவமைக்கின்றன.

இன்சொற்கள், உண்மையானதன்மை, பிறருக்கு நன்மை தரும் சொற்கள், மதநூல்கள்படித்தல், போன்றவைகள் பேசுவதில் தவத்தை உருவாக்கின்றன. உற்சாகமுள்ள மனம் நல்ல சுபாவம், நல்ல எண்ணங்கள், கட்டுப்பாடான மனம் இவைகள் மனத்தில் தவத்தை அனுசரிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

1) நம்பிக்கையுடையவன் ஒவ்வொரு குழப்பத்திலும் ஒரு நல்ல வழியைக் காண்கிறார். அது இல்லாதவர் ஒவ்வொரு வழியிலும் ஒரு குழப்பத்தையே காண்கிறார்.

2) தனக்கு வரும் துன்பங்களை மறக்க அச்சமின்றிப் பொறுத்துக் கொண்டு பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருக்க வேண்டும்.

3) கஷ்டகாலத்தில் ஒட்டகத்தின் மேல் நின்றாலும் நாய் கடிக்கத்தான் செய்யும்.

4) தன்மானம், தன்னறிவு, தன்னடக்கம் இந்த மூன்றுமே வாழ்க்கையில் தலைசிறந்த ஆற்றலை அழிக்கக் கூடியவை.

5) நாமே செய்து கொள்ளக்கூடிய காரியம் எதையும் மற்ற எவரையும் செய்யச் சொல்லக்கூடாது.

6) பொய் சொல்பவர்களுக்கு கிடைக்கும் தண்டனை அவன் உண்மை சொல்லும் போது யாரும் அவனை நம்பாதிருத்தல்.

7) நல்ல நம்பிக்கை நல்வழிகாட்டும், சந்தேகம் சங்கடம் தரும்.
8) தன்மானத்தை இழந்த பிறகு, ஒருவன் இழப்பதற்கு வேறு ஒன்றுமில்லை.

9) எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் விழிப்பாக இருந்தால் போக வேண்டிய இடத்தை உறுதியாக அடையலாம்.

10) பிள்ளைப் பருவம், இளமைப் பருவம், கிழப் பருவம் எல்லாம் கழிந்து விட்டது. நான்காம் பருவம் வந்து விட்டது. எலியைப் பூனை நோக்கியிருப்பது போல் யமன் நோக்கியிருக்கிறான்.

11) கடவுள் வாரந்தோறும் சம்பளம் கொடுப்பதில்லை வாழ்க்கை முடிவில் கொடுக்கிறான்.

12) உனது குணம் சரியாக இருந்தால் அவனது புகழும் சரியாக இருக்கும்.

*— யாரோ*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களுக்குச் செல்லும் போது கவனிக் வேண்டியவை..

1. ஆசாரத்துடன் செல்ல வேண்டும்.

2. புஷ்பம், பழம், வெற்றிலை, பாக்கு, கற்பூரம், ஒருதீபத்திற்கு வேண்டியளவு பசுநெய், அல்லது நல்லெண்ணெய், ஊதுபத்தி ஆகியவை அல்லது எது முடியுமோ அதை எடுத்துச் செல்லவும்.

3. ஆலயத்தில் பலிப்பீடத்திற்கு முன் நமஸ்காரம் செய்ய வேண்டும்.

4. நமஸ்காரம் செய்யும் போது சந்நிதிகள் இல்லாத பக்கமாக கால்களை நீட்ட வேண்டும்.

5. திரை போட்டிருக்கும் போது நமஸ்காரம் செய்யக் கூடாது.

6. பிரதஷிணங்கள் செய்யும் போது அங்குள்ள தெய்வ ஸ்தோத்திரங்களை சொல்ல வேண்டும்.

7. ஆலயத்துள் தெய்வ சம்பந்தமான ஸ்தோத்திரம் விஷயங்கள் மட்டும் பேசவும்.

8. ஆலயத்துக்குள் மனிதர்கள் ஒருவரை ஒருவர் நமஸ்காரம் செய்யக் கூடாது.

9. ஆலயத்தில் வீண் பேச்சுக்கள் பேசக்கூடாது. (ஊர் வம்பெல்லாம் கோயிலுக்கு வெளியே வைத்துக் கொள்ளவும்)

10. காலணிகள் உபயோகிக்கக் கூடாது. எச்சில் துப்புவது, அசுத்தம் செய்வது, சத்தம் போட்டு உரக்கப் பேசுவது, இதெல்லாம் கூடாது.

11. சந்நிதிகளை மறைக்காது ஓரமாக நின்று மற்றவர்களும் தரிசனம் செய்யும் படி இடம் விட்டு நின்று தரிசனம் செய்ய வேண்டும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாபாரத தத்துவ முத்துக்கள்

1. பால் குடிப்பது பாம்புகளின் விஷத்தை வளர்ப்பது போல், நல்ல அறிவுரைகள் துஷ்டர்களின் கோபத்தை வளர்க்கவே செய்யும்.

2. செல்வத்தை இழந்தவன் எதையும் இழந்தவன் ஆக மாட்டான். ஆனால் ஒழுக்கத்தை இழந்தவன் எல்லாவற்றையும் இழந்தவன் ஆவான்.

3. மடையர்களும் புத்திமான்களும் சுகம் அனுபவிக்கிறார்கள். இவர்களுக்கு நடுவில் இருப்பவர்கள் (மடையருமல்ல, புத்திமானுமல்ல) உலகில் சிரமப்படுகிறார்கள்.

4. நல்லவனுக்கு எது வெட்கத்தை அளிக்கிறதோ அது துஷ்டனுக்கு ஆனந்தம் அளிக்கிறது.

5. பெற்ற தாயைப் பற்றி குற்றம் கூறக்கூடாது.

6. பிற உயிர்களைகத் துன்புறுத்துவது தன் உயிருக்கே உலையாய் முடியும்.

7. புகழைக் காப்பாற்ற வேண்டும். ஏனெனில் அது மிகவும் பலமானது. புகழை இழந்தவனின் வாழ்க்கை பயனற்றது. புகழ் அழியாமல் இருக்கும் வரையில் மனிதன் வாழ்கிறான். புகழ் இழந்தவன் நாசமடைகிறான்.

8. மிகுந்த ஆவலுடன் எதையும் எதிர்பார்க்காதே, ஆசையின்மையே பரமசுகம்.

9. சூரியன் இல்லாதபோது, விளக்கு வெளிச்சம் தருவதுபோல் நல்லதைச் சொல்பவன் சிறுவனாக இருந்தாலும் அவன் சொல்வதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. அழகு, அழகில்லாதது என்று ஒன்றும் கிடையாது. எவனுக்கு எது பிடித்திருக்கிறதோ அதுதான் அவனுக்கு அழகாகத் தோன்றும்.

11. எவர் வாழும் போது நண்பர்கள், உறவினர்கள் ஆகியவர் களையும் பாதுகாத்து மகிழ்ச்சியுடன் வாழ்கிறாரோ அவர் வாழ்வுதான் நல்ல வாழ்வு. சுயநலத்துடன் தனக்காக எல்லோரும் தானே வாழ்கிறார்கள். அதில் என்ன சிறப்பு இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகவத் கீதை

1. ஞானத்தைப் போல் தூய்மை தரும் பொருள் இவ்வுலகத்தில் வேறேதுவுமில்லை. யோகத்தில் நல்ல சித்தியடைந்தவன் தானாகவே தக்க பருவத்தில் அதை தனக்குள் கிடைக்கப் பெறுகிறான்.

2. பரம்பொருளை அடையவேண்டுமா, உடம்பிலுள்ள எல்லா வாசல்களையும் செம்மையாக அடக்கி, மனதை உள்ளேயே நிலைநிறுத்தி, உயிரை அறிவோடு நன்றாக நிலைநாட்டி, தியானத்தைக் கைக்கொண்டு என்னையே நினைத்தவனாக எவன் தன்னை மறந்து விடுகின்றானோ அவன் பரம் பொருளை அடைகின்றான்.

3. எப்பொழுது எப்பொழுது தர்மம் குலைந்து அதர்மம் மேம்படுகிறதோ அப்பொழுதெல்லாம் நான் உடல் தாங்கி வருகிறேன். நல்லவர்களைக் காப்பாற்றுவதற்காகவும், துஷ்டர் களை அழிப்பதற்காகவும், தர்மத்தை ஸ்தாபிப்பதற்காகவும் நான் ஒவ்வொரு யுகத்திலும் தோன்றுகின்றேன்.

4. பக்தியுடன் எனக்கு ஒருவன் பச்சிலையையே, புஷ்பத்தையோ, பழத்தையே, நீரையோ அழித்தாலும் கூட அதனை அழிக்கும் உள்ளத்தின் தூய்மையைப் பாராட்டி நான் அப்பொருள் ஏற்று அருள் புரிகிறேன்.

5. யார் எந்தெந்த உருவத்தில் என்னை வழிபட்டாலும்சரி, அவரை அந்தந்த உருவில் சென்று அடைகின்றேன்.

6. காமம், கோபம், பேராசை ஆகிய மூன்றும் ஆத்மாவிற்கு நாசம் விளைவிக்கும் நரகத்தின் வாயில்கள். ஆகையால் இந்த மூன்றையும் தவிர்க்க வேண்டும்.

7. பழையதாகிவிட்ட சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு புதிய சட்டையை அணிந்து கொள்வதைப் போல உடலுக்குள் இருக்கும் ஆத்மா பழைய உடலை உதறி விட்டு புதிய உடலை நாடிப்போகிறது.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதார கௌரி விரதத்தின் தத்துவம் என்ன? இதை அனுஷ்டிப்பது எப்படி?

புரட்டாசி மாதம் பூர்வ பட்சம் அஷ்டமியில் இந்த விரதம் தொடங்கப்பட வேண்டும். நிறைகுடம் வைத்து அதில் சிவபெருமானை ஆவாகனம் செய்து இருபத்தொரு இழையுடைய நூலினைக் கையினாற் புனைந்து, அர்ச்சனை செய்து, தூபதீப நிவேதனம் புரிந்து வழிபடவேண்டும்.

ஐப்பசி மாத அமாவாசைக்கு முந்தின நாள் சதுர்த்தசியன்று அதிகாலையில் எழுந்து நீராடி, தூயஉடைஉடுத்தி நெல்லின் மீது நிறைகுடம் வைத்து, மாவிலையும் தருப்பையும் வைத்து, அதில் சிவமூர்த்தியை நிறுவிச் சிவமாகவே பாவனைபுரிந்து தூபதீப நிவேதனங்கள் செய்து வழிபடவேண்டும். மறுநாள் அமாவாசையன்று காப்பை அவிழ்த்து விட்டு உணவருந்த வேண்டும். இவ்விரதம் கேதார விரதம் எனப்படும்.

பிருங்கி முனிவர் சக்தியை விலக்கிச் சிவபெருமானை மட்டும் வலம் வந்து வழிபட்ட காரணத்தினால் உமாதேவியார் வெகுண்டு இறைவனின் இடப்பாகம் பெறும் பொருட்டு, திருக்கயிலாய மலையிலிருந்து நீங்கி கௌதம முனிவருடைய வனத்தை அடைந்தார். அவ்வனம் அம்பிகையின் வரவினால் மிகவும் செழிப்புற்றது. மிருகங்களும் பறவை இனங்களும் ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

கௌதமர் கௌரியைத் தொழுது துதித்தார். இந்த விரதத்தை கௌதமர் கூற விதிப்படி உமையம்மையார் தோற்று இறைவருடைய இடப்பாகத்தைப் பெற்றும் மகிழ்ந்தார். கௌரிதோற்ற காரணத்தால் இதுவே கேதார கௌரி விரதம் எனப் பெயர் பெற்றது.

இருபத்தொரு நாள் அனுஷ்டிக்க முடியாதவர்கள் ஐப்பசி தேய்பிறை சதுர்த்தசியன்று மட்டும், மேற்கூறிய முறைப்படி அனுஷ்டிக்க வேண்டும். இவ்விரதத்தை எல்லோரும் மேற்கொண்டு, அன்று சிவமூர்த்தியை வழிபட்டு நலம் பெறுதல் வேண்டும். தீபங்களை வரிசையாக ஏற்றி பக்தியுடன் வழிபட வேண்டும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

## வேண்டுதற் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்

பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்துவந்தேன்

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே

அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்

சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு

வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா

வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா

பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா

வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா

பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே

எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபகழ் தேவியளே
காப்பெனக்குக் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று

ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்

ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு

சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்

**"அம்பிகையை சரணம்புகுந்தால்**
**அதிக வரம் பெறலாம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிங்காஷ்டகம்

**ராகம்: யமுனா கல்யாணி** **தாளம்: ஆதி**

பிரம்மமுராரி ஸ்ரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்ம ஜதுக்க விநாசக லிங்கம்
தத்ப்ரணாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுநி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசந லிங்கம்
த்தப்ரணாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்திக லிங்கம்
தத்ப்ரணாமி ஸதாசிவ லிங்கம்

கனகமஹாமணி பூஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித விங்கம்
தஷிஸீ யக்ஏ விநாயசந லிங்கம்
த்தப்ரணாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜஹார ஸ்சோபித லிங்கம்
ஸ்ஞ்சிதபாப விநாசந லிங்கம்
தத்ப்ரணாமி ஸதாசிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பானவர் பக்தி பிரேசவ லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்டவனோ பரி வேஷ்டித லிங்கம்
ஸர்வனமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாசித லிங்கம்
தத்ப்ரணாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸ்ரவந புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணாமி ஸதாசிவ லிங்கம்

**இவ் லிங்காஷ்டகம் படித்தால் நன்மைகள் கிடைக்கும், துன்பங்கள் நீங்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகம் பெற தெய்வ சிந்தனைகள்.....

1) எப்போதும் இறைவன் நாமத்தை ஜபம் செய்த படியே இருங்கள், அதன் விளைவாக உங்கள் மனம் தெளிந்து இருக்கும்.

2) நான் என்ற அகந்தையை நீக்கி சரணாகதியுடன் ஈசுவரநினைவுடன் எப்போதும் வாழ்ந்தால் இறைவன் அருளால் பிறவிப் பெருங்கடலைக் கடந்து வீடு பேறுபெறலாம்.

3) எப்போதும் மனதில் நல்ல சிந்தனைகளையே வளர்த்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த தெய்வீகமான உரையாடல் களில் ஈடுபடவேண்டும்.

4) இறைவன் அருள் நம்மிடம் பரிபூரணமாக இருக்கும் போது எதுவும் யாரும் நம்மைத் தோற்கடிக் முடியாது.

5) உள்ளத்தில் இறைவனின் பற்றும், இறைவன் நினைவும் அதிகம் ஏற்படுமாறு செய்தால் தீய நினைவுகள், தீய சக்திகள் தலையெடுக்க மாட்டாது.

6) இறைவனைக்காண சுவர்க்கம் போகவும் வேண்டாம் உலகம் முழுவதும் சுற்றவும் வேண்டாம், தூய்மையான மனதுடன் இருப்பவன் தன் இதயத்திலே இறைவனைக் காணலாம்.

7) பாவங்களிலிருந்து விடுபடவும், தெய்வபக்தி உறுதி பெறவும் விரதங்கள் பெரிதும் உதவுகின்றன.

8) ஆணவம் அகலும் போது இறைவனின் காட்சி கிடைக்கும். அவ்விதம் ஆணவம் அகலுவதற்கு இறைவன் கிருபையே வேண்டும்.

9) "ஓம்" என்ற மந்திரத்தை ஜபம் செய்வதால் எல்லா ஆன்மீகத் தடைகளும் நீங்கி ஆன்மா விழிப்படையும்.

10) மனித உடலுக்கு ரத்தம் எவ்வளவு அவசியமோ அந்தளவுக்கு தெய்வ சிந்தனை ஆத்மாவுக்கு தேவை.

11) கண்ணீர் விட்டு அழுது இறைவனிடம் "இறைவா!" என்னை உன் பக்கம் இழுத்துக்கொள். எனக்கு அமைதியைத் தந்தருள்க என்று பிரார்த்தனை செய்.

**காசு காசு என்று பேயாய் அலையாதே, ஓரளவு தான் பணத்தால் பலன் கிடடும். உண்மையான அன்பை பணம் கொடுத்து வாங்க முடியுமா? அன்பே ஆண்டவன். அவனை விலைக்கு வாங்க முடியுமா? அன்புடன நேசிப்பவரை உணர்ந்து நட உன்னைச்சுற்றி போலியாக நடமாடும் மனிதர்களை நம்பாதே. அன்பிற்கு அடிமையாகிவிடு. ஆத்திரத்திற்கு பலியாகாதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது உறவுகள் மேம்பட..............

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள். அர்த்தமில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talks)

எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள் (Diplomacy) விட்டுக் கொடுங்கள். (Compromise)

சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத் தான் ஆக வேண்டும் என்று உணருங்கள். (Tolerance)

உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)

அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)

எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

கேள்விப்படுகின்ற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.

உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)

மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள். (Misunderstanding)


மற்றவர்களுக்கு மரியாதை காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன் படுத்தவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் தொடக்க முன் வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



அன்பின் அடித்தளமாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் இருப்பிடமாய், பொறுமைக்கு இலக்கணமாய் வாழ்ந்து காத்த எனது குடும்பத் தலைவி அமரர் சரஸ்வதி அவர்களின் பிரிவு கேட்டு ஓடோடி வந்து உதவிய அயலவர், உறவினர் மற்றும் நேரில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி, தந்தி மூலம் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து தொடர்பு கொண்டு ஆறுதல் அநுதாபங்கள் தெரிவித்த அன்புள்ளங்களிற்கும், மற்றும் எனக்கு பண உதவி புரிந்த சகோதரங்களுக்கும், அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம், ஆத்ம சாந்திப் பிரார்த்தினை ஆகிய நிகழ்ச்சிகளிலும் மற்றும் பலவழிகளிலும் எம்முடன் சேர்ந்து உதவி ஒத்தாசை புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள். மேலும் இம்மலரை குறுகிய காலத்தில் அழகாக ஆக்கி வடிவமைத்துத் தந்த அராலியூர் திரு. வி. செல்வரத்தினம் J. P அவர்கட்கும் இந்நூலை அழகுற கணணி மயப்படுத்திய பண்டத்தரிப்பு J.S. அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள்.

இ. அதிகாரசிங்கன் (கணவர்)


**மலர் ஆக்கம், வடிவமைப்பு**

"அறநெறிச் செல்வர்", "இறைபணிச் செம்மல்",

"இலக்கிய செம்மல்", "அருள்நெறிச் செல்வர்",


**வி. செல்வரத்தினம் J.P**

(அகில இலங்கை சமாதான நீதவான்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ
அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாக நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
நீ எதை படைத்திருந்தாய்
அது வீணாவதற்கு
எதை எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாக-
றது.
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகிறது.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org